யாழ்ப்பாணம்

10 வருடங்களில் நாடு முழுவதும் 1 லட்சம்பேர் பலி!

விலை ரூபா 5-00

ஈழநாடு

THE EELANADU
NATIONAL TAMIL DAILY

மலர் 35 திருவள்ளுவர் ஆண்டு 2024 மார்கழி 25 இதழ் 327
யாழ்ப்பாணம் ஞாயிற்றுக்கிழமை 9-1-1994

(கொழும்பு)
1983-ம் ஆண்டிலிருந்து இன்றுவரை ஒரு லட்சத்துக்கு மேற்பட்டோர் அரசாங்கத்துக்கு எதிராகசெயல்பட்டமையாலும், யுத்தங்களினாலும் மரணத்தைத் தழுவியுள்ளார்கள் என்று 'ராவய' ஆசிரியர் விக்டர் ஐவன் பி.

(4-ம் பக்கம் பார்க்க)

எலும்புக்கூடுகள் விவகாரம்

நீதி விசாரணையின் பின்பே மனித உரிமை நடவடிக்கை

(கொழும்பு)
சூரியகந்தப் பகுதியில் கண்டெடுக்கப்பட்ட மனித எலும்புக்கூடுகள் பற்றிய விசாரணை நடைபெற்று அதன் அறிக்கையின் பின்தான் மனித உரிமைமீறல் கண்காணிக்கும் குழு இதுபற்றிநடவடிக்கைஎடுக்கும் என்று மனித உரிமை

(2-ம் பக்கம் பார்க்க)

இரண்டு மாதங்களில் 2000 பேர் பலி

(கொழும்பு)
1993-ம் ஆண்டின் கடைசி இரு மாதங்களிலும் வடக்கு—கிழக்கில் சுமார் 2000 பேர் வரை உயிரிழந்துள்ளதாக 'ஐலண்ட்' பத்திரிகை தெரிவித்துள்ளது.

(4ம் பக்கம் பார்க்க)

● அரசு நடத்தும் போரினால்

உலக அரங்கில் இலங்கைக்கு அபகீர்த்தி ஏற்பட்டு வருகிறது

- 'நியூயோர்க் ரைம்ஸ்' கூறுகிறது -

(கொழும்பு)
இலங்கையில் சிறுபான்மை இனத்தவருடன் பெரும்பான்மை அரசு தொடர்ந்தும் நடாத்திவரும் முடிவற்ற போரால் உலக அரங்கில் இலங்கையின் பெயருக்கு பெரும் அபகீர்த்தி ஏற்பட்டு வருவதாக 'நியூயோர்க் ரைம்ஸ்' பத்திரிகை தெரிவித்துள்ளது.

'நியூயோர்க் ரைம்ஸ்' பத்திரிகையின் சிரேஷ்ட ஆசிரியரான திருமதி பாபரா குரொஸெட் இலங்கை குறித்து எழுதிய கட்டுரை ஒன்றில் மேற்கண்டவாறு தெரிவித்துள்ளார்.

அவர் மேலும் கூறுகையில், இலங்கையில் யுத்த நிலைமைகள் பற்றி பெரிதும் அக்கறை காட்டாத அரசியல்வாதிகள் வெளிநாடுகளிலிருந்து இலங்கை வரும் மனித உரிமைகள் அமைப்புகளுக்கு தமது பிரச்சினைகளை கூறி உண்மை நிலையை மறைத்து வருகிறார்கள். ஆனால் உண்மை நிலை என்ன என்பது உலகிற்கு நன்கு தெரிகிறது. உலக அரங்கில் இருந்து வரும் மனித

(4ம் பக்கம் பார்க்க)

கொழும்பில் படையினரால் மீண்டும் தமிழ் இளைஞர் கைது

(கொழும்பு)
கொழும்பில் தமிழ் இளைஞர்கள் மீண்டும் பெருமளவில் கைது செய்யப்படுகிறார்கள் என்று தெரிவிக்கப்படுகிறது.

இந்த நடவடிக்கையில் ஊர [illegible] பொலிசார் ஈடுபட்டுள்ளனரென்றும், தமிழர்கள் அதிகமாக வாழும் வெள்ளவத்தைப் பகுதியிலே இரகசியப் பொலிசார் பெருமளவில் தமிழ் இளைஞர்களை கைது செய்கிறார்கள்.

கைது செய்யப்படுபவர்கள் இரகசியப் பொலிசாரின் 6ம் மாடிக்கு கொண்டு சென்று சித்திரவதைக்கு உட்படுத்தப்படுகிறார்கள் முன்னர் கைதானவர்களும் மீண்டும் கைது செய்யப்பட்டு சித்திரவதைக்

(4ம் பக்கம் பார்க்க)

இலங்கை அரசு மீது மன்னிப்புச்சபை கண்டனம்

(கொழும்பு)
தமிழ் இளைஞர்கள் கைது செய்யப்பட்டு பின்பு காணாமல் போவதுபோன்ற சம்பவங்களை சர்வதேச மன்னிப்புச்சபை வன்மையாகக் கண்டித்து இலங்கை அரசுக்கு தனது ஆட்சேபத்தை தெரிவித்துள்ளது.

சர்வதேச மன்னிப்புச்சபையின் சுவிஸ்நாட்டு குழுத் தலைவர் இலங்கை ஜனாதிபதிக்கும் பிரதமருக்கும் தனது கண்டனத்தை தெரிவித்துள்ளார்.

(4-ம் பக்கம் பார்க்க)

காஞ்சிகாமகோடி சுவாமிகள் நேற்று முக்தியடைந்தார்

100-வது வயதில் அமரத்துவம்

(சென்னை)
காஞ்சி காமகோடி பீடாதிபதி ஸ்ரீ சந்திரசேகரேந்திர சரஸ்வதி சுவாமிகள் நேற்றுப் பி.ப. முக்தியடைந்தார். இவர் முக்தியடையும்போது வயது 100 ஆகும்.

காஞ்சிப்பெரியவரான இவர் காஞ்சிபுரம் மடத்தில் நேற்று ஓய்வெடுத்துக்கொண்டிருக்கும்போது பிற்பகல், 3.20 மணிக்கு முக்தியடைந்தார். இந்தச் செய்திகேட்டு ஆயிரக்கணக்கான பக்தர்கள் சங்கர மடத்திற்கு சென்றவண்ணமுள்ளனர்.

பொதுமக்கள் தரிசனத்திற்காக காஞ்சிப் பெரியவரின் பூதவுடல் சங்கர மடத்தில் உள்ள ஒரு மேடையில் வைக்

(4ம் பக்கம் பார்க்க)

வாரத்தில் 3 நாள் கிளாலி படகு சேவை

இன்று நடைபெறாது

(யாழ்ப்பாணம்)
கிளாலி-பூநகரி படகுசேவை இனிமேல் ஒவ்வொரு வாரமும் திங்கள், செவ்வாய், வெள்ளி ஆகிய மூன்று தினங்களில் மட்டுமே வழமையான நேரத்திற்கு நடைபெறுமென விடுதலைப் புலிகளின் அரசியல் துறையினர் அறிவித்துள்ளனர்.

இந்த நடைமுறை தொடர்ந்தும் அமுலிலிருக்குமெனவும் அறிவிக்கப்பட்டுள்ளது.

இதேவேளை இன்று ஞாயிற்றுக்கிழமை படகுசேவை நடைபெறமாட்டாது எனவும் அறிவிக்கப்பட்டுள்ளது. -இ

யுத்த நிலை குறித்து தீவிர ஆராய்வுகள்

(கொழும்பு)
வடக்கு-கிழக்கு யுத்தநிலை குறித்து அரசுதற்போது தீவிர ஆய்வொன்றை பல துறைகளிலும் மேற்கொண்டுவருவதாக செய்திகள் தெரிவிக்கின்றன.

இதற்கமைய பாதுகாப்பு அமைச்சின் அதிகாரிகள் மட்டத்திலும், தளபதிகள்மட்டத்திலும் முக்கிய சந்திப்புகள் நடைபெற்று வருகிறதாம். அடுத்த படைநடவடிக்கையும் அதற்கான வெற்றி குறித்துமே தீவிரமாக ஆராயப்படுகிறதாம்.

இதேவேளை இப்போர் சம்பந்தமாக ஏனைய அமைச்சர்

(2ம் பக்கம் பார்க்க)

'93' இலங்கைக்கு பல வழிகளிலும்

துயரம் தோய்ந்த ஆண்டாகும்

(கொழும்பு)
1993-ம் ஆண்டு இலங்கையில் ஒரு துயரம் தோய்ந்த ஆண்டாகவே கணிக்கப்படுவதாக வெரித்தாஸ் வானொலி நேற்று தெரிவித்தது.

1993-ம் ஆண்டு மே 1ம் திகதி இரும்புக்கரம் கொண்டு இலங்கையை ஆட்சி செய்து வந்த ஜனாதிபதி ஆர். பிரேமதாஸா மனிதவெடிகுண்டு ஒன்றினால் படுகொலை செய்யப்பட்டார்.

இதே ஆண்டு ஏப்ரல் மாதம் வலிமை வாய்ந்த தலைவராக இருந்த லலித் அத்துலத்முதலியும் சுட்டுக்கொலை செய்யப்பட்டார்.

இந்த நிகழ்ச்சிகளின் பின்பு இராணுவம் தனது நடவடிக்

(2-ம் பக்கம் பார்க்க)

நவம்பர் 26ம் திகதி

வேலைக்கு வராதோருக்கு வேலை நீக்கமாம்

(கொழும்பு)
தமிழீழ தேசிய தலைவர் வே. பிரபாகரனின் பிறந்த தினமான நவம்பர் 26-ம் திகதி கொழும்பில் வேலைக்குச் சமுகமளிக்காதவர்களை சேவையிலிருந்து நீக்குவதற்கு சில தனிப்பட்ட நிறுவனங்கள் நடவடிக்கை எடுத்து வருகின்றன என்று 'ராவய' பத்திரிகை தெரிவித்துள்ளது.

நவம்பர் 26ம் திகதி கொழு

(2-ம் பக்கம் பார்க்க)

வரி விளம்பரம்

கணிதம் - கணிதம்-94

இப்பாடத்தில் உயர்ந்த பெறுபேறுடைய இதுவரையும் முன்னேற்றமடையாத மாணவர்களும் ஆண்டு-4 தொடக்கம் O/L வரை அனுபவமுள்ள B. Sc. ஆசிரியரால் கற்பிக்கப்படும். 85, சிவன் கோவிலடி திருநெல்வேலி. (இ-696)

“நான் கடவுள்” (ஆத்மா)

நான் யார்? நான் (ஆத்மா) நேற்றும், இன்றும் என்றும் மாறுதலின்றி இருக்கிறேன். பிதா, குமாரன், பரிசுத்த ஆவியும் நானே. என்னையறிந்தவன் பிரசவைக் கண்டவன் ஆவான். ரூபா 15/- நூலாசிரியர் சதியா. சோபிதா, யாழ்ப்பாணம். இ-707)

வாடிக்கையாளர்களின் கவனத்திற்கு

நியூ விக்ரேஸ் வாடிக்கையாளர்கள் கவனத்திற்கு 31-12-93 க்கு முன் எம்மிடம் திருத்துவதற்கு ஒப்படைத்த பொருள்களை 31-1-94 க்கு முன் பெற்றுக்கொள்ளவும் 31-1-94 க்குப் பின் அவற்றை மீளப்பெறமுடியாது என்பதை அன்புடனும், வேதனையுடனும் தெரிவித்துக்கொள்கிறோம். நன்றி. நியூ விக்ரேஸ் பி எம் கி. ஒழுங்கை, மணிக்கூட்டு வீதி, யாழ்ப்பாணம். சி 700)

வைத்தியம்

செங்கண்மாரி, (Hepatitis) குடற்புண், தொய்வு, வாத ரோகங்கள், வலிப்பு நோய், பீநிசம், தலையிடி, [illegible], சரும நோய்கள், மாதவிடாய்க்குத்து, இரத்தப்போக்கு, வெள்ளைக்கசிவு, கருவழிதல், மகப்பேறின்மை, வீரியக் குறைவு, மூலவியாதிகள், மூத்திரரோகங்களில் பிரபலமானவர். சகல வியாதிகளையும் குணப்படுத்துவார். வேலணை வைத்திய கலாநிதி சி. இராசரத்தினம் 181, 2-ம் குறுக்கு வீதி, பறங்கித் தெரு, யாழ்ப்பாணம். (இ-689)

இன்று

(நெல்லியடி)

புலோலி சிங்கைநகர் உதயசூரியன் சனசமூக நிலைய புதுவருட நிர்வாகிகள் தெரிவு இன்று 9-ம் தேதி ஞாயிற்றுக்கிழமை காலை 10-00 மணிக்கு திரு. வி. ஜி. தங்கவேல் தலைமையில் நடைபெறவுள்ளது. 160)

0 0 0

(கொழும்புத்துறை)

கொழும்புத்துறை இந்துமா மன்றத்தின் வருடாந்தப் பொதுக்கூட்டம் இன்று 9-ம் திகதி ஞாயிற்றுக்கிழமை பகல் 3-30 மணிக்கு கொழும்புத்துறை சனசமூக நிலைய சிறுவர் பாடசாலை மண்டபத்தில் நடைபெறும். (154)

0 0 0

(பண்டத்தரிப்பு)

மானிப்பாய் லயன்ஸ் கழகமும் யாழ்ப்பாண லயன்ஸ் கழகமும் இணைந்து மானிப்பாயில் இயங்கி வரும் தெல்லிப்பழை அரசினர் வைத்தியசாலையிலுள்ள மனநோயாளர்களுக்கு உடுபுடவைகளையும், விளையாட்டு உபகரணங்களையும் வழங்கும் வைபவம் இன்று 9-ம் திகதி பிற்பகல் நடைபெறவுள்ளது. 72)

0 0 0

(யாழ்ப்பாணம்)

கடந்த 05-ம் திகதி நடைபெறவிருந்த வலிகாமம் கோட்ட கிராமிய உற்பத்திக் குழுக்களுக்கான கலந்துரையாடல் இன்று 9-ம் திகதி பிற்பகல் 3-00 மணிக்கு மருதனார்மடம் இராமநாதன் கல்லூரியில் நடைபெறவுள்ளது. இந்த கலந்துரையாடலில் தவறாது சகல கிராமிய உற்பத்திக் குழுக்களையும் கலந்து கொள்ளுமாறு கேட்கப்பட்டுள்ளது. (இ)

கடையில் திருட்டு

(கோப்பாய்)

கோப்பாயில் றேடியோ திருத்தும் கடையொன்றில் இனம்தெரியாதவர்களால் அண்மையில் களவாடப்பட்டுள்ளது.

மேற்படி கடையில் 8000/- ரூபா பெறுமதியான பொருட்கள் திருட்டுப்போயுள்ளன.

சைக்கிள் விநியோகம்

(கொழும்புத்துறை)

கட்டைவேலி பல நோக்குக் கூட்டுறவுச் சங்கம் சங்க அங்கத்தவர்களுக்கு இதுவரை 500 துவிச்சக்கரவண்டிகளை வழங்கியுள்ளது.

மேலும் அங்கத்தவர்களுக்கு 250 சைக்கிள்களை வழங்க இச்சங்கம் முயற்சி எடுத்து வருகிறது (54)

மூக்குக்கண்ணாடி பிறேம் வழங்கப்படும்

(பண்டத்தரிப்பு)

வட்டுக்கோட்டை லயன்ஸ் கழகம் இலவச மூக்குக் கண்ணாடி கேட்டு விண்ணப்பித்த வசதி குறைந்தவர்களுக்கு கண்ணாடிக்கான ‘பிறேம்’களை வழங்குவதற்கு நடவடிக்கை மேற்கொண்டு வருகின்றது.

தற்போது மூக்குக் கண்ணாடிகளுக்கான ‘லென்ஸ்’களை பரிசோதனை செய்து வழங்குவதற்கு நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டு வருவதாக தெரிவிக்கப்படுகிறது.

POST GRADUATE DIPLOMA/ DIPLOMA IN ENGLISH LANGUAGE TEACHING 1992/93

The Lectures for the above Courses will commence on 1994-01-17. The letters have been already posted to the selected candidates to register for the above Course and meet the head English Language Teaching Centre at 10-00a m. on 1994-01-10.

Registrar
University of Jaffna.
1994 01-07.

(A 3750)

யாழ்ப்பாணப் பல்கலைக்கழகம்
இலங்கை
பட்டப்பின் டிப்ளோமா ஆங்கிலம்/
டிப்ளோமா ஆங்கிலம்
பரீட்சைகள் - 1994

மேற்படி பரீட்சைக்குத் தகுதிவாய்ந்தவர்களிடமிருந்து விண்ணப்பங்கள் கோரப்படுகின்றன. விண்ணப்பப் படிவங்களைப் பரீட்சைக் கிளையில் பெற்று பூர்த்தி செய்து ஒரு பாடத்திற்கு 50/- ரூபா வீதம் இருப்பக் கருமபீடத்தில் செலுத்தி பற்றுச்சீட்டுடன் விண்ணப்பங்களை ஜனவரி 20 ஆம் திகதிக்கு முன்னதாகப் பரீட்சைக் கிளையில் சமர்ப்பிக்கவும். பரீட்சைகள் ஜனவரி 26 ஆம் திகதி தொடக்கம் 31 திகதி வரை நடைபெறும்.

பதிவாளர்
(ஏ-3752)

மாட்டுப் பொங்கல்

(பருத்தித்துறை)

வடமராட்சி கால்நடை வளர்ப்போர் கூட்டுறவுச் சங்கம் 15-ம் திகதி சனிக்கிழமை மாட்டுப்பொங்கலை கொண்டாடவுள்ளது. பருத்தித்துறை கால்நடை வைத்திய அதிகாரி அலுவலகத்தில் வடமராட்சி கால் நடைவளர்ப்போர் கூட்டுறவுச் சங்கத்தலைவர் திரு. வி. தணிகாசலம் தலைமையில் இம்மாட்டுப் பொங்கல் விழா நடைபெறவுள்ளது. (52)

மகாகுளிர்த்தி அபிஷேகம்

(பருத்தித்துறை)

சரித்திரப் பிரசித்தி பெற்ற ஸ்ரீவல்லிபுர ஆழ்வார் ஆலயத்தில் எதிர்வரும் 13ம் திகதி வியாழக்கிழமை மஹாகுளிர்த்தி அபிஷேகம், விசேட பூசைகள் நடைபெறும்.

-52

இளைஞர் கழகங்கள்

(மானிப்பாய்)

ஒவ்வொரு கிராமசேவை அலுவலர் பிரிவுகளிலும் இளைஞர் கழகங்கள் அமைக்கப்படவுள்ளன.

இதற்கான நடவடிக்கைகளை தேசிய இளைஞர் சேவைகள் மன்றம் தற்பொழுது மேற்கொண்டு வருகிறது. -71

இலாபப் பணம் பங்கிடப்பட்டது

(நெல்லியடி)

பருத்தித்துறை பனை தென்னைவள அபிவிருத்திக் கூட்டுறவுச் சங்கம் சகல அங்கத்தவர்களுக்கும் 91ம் வருடத்திற்கான இலாபப் பணமாக ரூபா நான்கு இலட்சத்து 89 ஆயிரத்து 46 ரூபா 15 சதம் கடந்த முதலாம் திகதி பங்கிட்டு வழங்கப்பட்டுள்ளதாக மேற்படி சங்க பொதுமுகாமையாளர் திரு. த. மகேந்திரராசா தெரிவித்துள்ளார்.

-16

தையல் பயிற்சி நிலையம்

(நெல்லியடி)

விடுதலைப் புலிகளின் வடமராட்சிக் கோட்ட ஆதரவில் புலோலி கிழக்கில் தையல் பயிற்சிநிலையம் கடந்த ஞாயிற்றுக்கிழமை திறந்து வைக்கப்பட்டது.

இதன் பொறுப்பாளர் திரு. ரவிவர்மன் தலைமையில் நடைபெற்ற இத்திறப்பு விழாவில் பருத்தித்துறை வட்ட பொறுப்பாளர் செல்வி யாழரசி மங்கள விளக்கேற்ற பருத்தித்துறை வட்டப் பொறுப்பாளர் திரு. கண்ணதாசன் தேசியக் கொடியை ஏற்றினார்.

வடமராட்சிக் கோட்ட உதவிப் பொறுப்பாளர் திரு. தயா நிலையத்தைத் திறந்து வைத்தார். (160)

கூட்டுறவு பரிசோதகர்கள் இடமாற்றம்

(யாழ்ப்பாணம்)

யாழ் கூட்டுறவுத் திணைக்களத்தில் கடமையாற்றிய கூட்டுறவுப் பரிசோதகர்கள் யாழ். மாவட்ட பிரதேச செயலகங்களுக்கு இடமாற்றம் செய்யப்பட்டுள்ளனர் என்று யாழ். மாவட்ட கூட்டுறவு உதவி ஆணையாளர் திரு. எஸ். விமலநாதன் தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவித்ததாவது, வடக்குக் கிழக்கு மாகாணசபை கூட்டுறவு அபிவிருத்தி ஆணையாளரினால் இடமாற்றம் செய்யப்பட்ட சுமார் 76 கூட்டுறவுப் பரிசோதகர்களும் யாழ். மாவட்டத்திலுள்ள 14 பிரதேச செயலர் அலுவலகங்களிலும் இம் மாதம் 1ம் திகதி முதல் கடமை ஏற்றுள்ளனர். -வ

93 இலங்கைக்கு

(1-ம் பக்கத் தொடர்ச்சி)

கைகளை மிகவும் துரிதப்படுத்தியது.

பத்து ஆண்டுகளுக்கு முன் இலங்கையில் தோன்றிய பிரச்சினை இன்னும் அணையவில்லை. கடந்த ஆண்டு நடைபெற்ற பல போர்களில் ஆயிரக்கணக்கான இராணுவத்தினரும் தமிழ்ப் போராளிகளும் அப்பாவித் தமிழ் மக்களும் கொல்லப்பட்டதுடன் பெருந்தொகையான தமிழர் அகதிகளாகினர்.

இனப்பிரச்சினைக்குத் நிரந்தர தீர்வு காணப்படாவிட்டால் இலங்கை இரண்டாகப் பிளவுபடுவதை யாராலும் தடுக்க முடியாது என்றுகூறினார் விமானப்படை முன்னாள் தளபதி ஹரி குணதிலக்க. இவரின் கூற்று இதுவரை ஆட்சியாளர்களின் காதுகளில் ஏறவில்லை என்பதுதான் சோகம்.

இலங்கை இராணுவத்தின் பல இராணுவ நிலைகளை விடுதலைப் புலிகள் வீழ்த்தியதும் கடந்த ஆண்டுதான். இரு இராணுவ முகாம்களிலிருந்து இஸ்ரேல் நாட்டு போர்க்கப்பல்கள் ஆயுதங்கள், தளபாடங்களையும் கைப்பற்றினர்.

பூநகரியில் ஏராளமான இராணுவத்தினர் கொல்லப்பட்டது குறிப்பிடத்தக்கது. அரசின் பின்னடைவுக்கு பிரேமதாசவுக்குப் பின்னர் ஜனாதிபதியாகப் பொறுப்பேற்ற விஜயதுங்க சில நடவடிக்கைகளை துணிந்து எடுத்தார்.

முப்பது அதிகாரிகள் நியமனம் உட்பட பிரேமதாசா மேற்கொண்ட பல்வேறு நடவடிக்கைகளை விஜயதுங்க மாற்றியமைத்தார். ஆனால் இனப்பிரச்சினையைத் தீர்க்க பிரேமதாசா அளவுக்குக்கூட விஜயதுங்க எந்த நடவடிக்கையும் எடுக்கவில்லை.

பிரேமதாசாவின் தனிநபர் அரசியல் மாறி, நபரே இல்லாத அரசியலாகிவிட்டது இலங்கை அரசு என்கிறார் இலங்கையின் எதிர்க்கட்சியான சுதந்திரக் கட்சியின் பொதுச்செயலர் தர்மசிறி சேனநாயக்கா.

விஜயதுங்காவின் சில நடவடிக்கைகள் தவறுதல்களுக்கு அச்சத்தை மிகைப்படுத்தி இருக்கின்றது. நாட்டில் இப்போது இனப்பிரச்சினை என்று ஒன்று இல்லை இருப்பதெல்லாம் பயங்கரவாதப் பிரச்சினைதான் அதை ஒழிக்கவேண்டுமென்று திரும்பத் திரும்பக் கூறுகிறார் ஜனாதிபதி விஜயதுங்க. இதனால் முப்படைகளையும் ஏவி இராணுவ நடவடிக்கையால் அப்பாவித் தமிழர்கள் தான் அதிகமாகப் பாதிக்கப்படுகிறார்கள்.

விஜயதுங்காவின் செயல்கள் சிங்கள இனவாதத்துக்கு ஊக்கமளிக்கின்றது. இது அரசுக்கு ஆதரவான தமிழ் அமைப்புகளுக்குப் பீதி ஏற்படுத்துகிறது என்று பத்திரிகை ஒன்று குறிப்பிட்டுள்ளது.

வடக்கு கிழக்கு மாகாணங்கள் தனித்தனியே செயல்பட வழிவகை செய்வதை [illegible] அனைத்து தமிழ் கட்சிகளும் எதிர்த்து வருகின்றன. இந்நிலையில் விஜயதுங்க ஒருபடி மேலே போய் கிழக்கு மாகாணத்துக்கு மட்டும் உள்ளூராட்சித் தேர்தலை அறிவித்து இருக்கிறது. இது இனப்பிரச்சினைக்கான தீர்வை மேலும் சிக்கலாக்கி இருக்கின்றது.

தமிழர்களின் இனப்பிரச்சினைக்குத் தீர்வு காண்பதை இலங்கை அரசு சுத்தமாக மறந்துவிட்டது. இனி தீர்வே இல்லை என்ற நிலை உருவாகிவிட்டது என இலங்கைத் தமிழ் காங்கிரஸ் தலைவர் குமார் பொன்னம்பலம் கூறியுள்ளார். -ம-வி-சி

யுத்த நிலைமை

(1-ம் பக்கத் தொடர்ச்சி)

களினதும் ஆலோசனைகளும் தற்போது பெறப்பட்டு வருவதாகவும் தெரிவிக்கப்படுகிறது. -சி

சுற்றுநிருபம் தாமதம்

(பண்டத்தரிப்பு)

மாணவத் தாதியர் பயிற்சி நெறிக்கு சுகாதார திணைக்களத்தில் கடமையாற்றும் ஊழியர்களிடமிருந்து விண்ணப்பங்கள் கோரும் சுற்றுநிருபம் ஒன்று யாழ். மாவட்டத்திற்கு மிகவும் தாமதமாகக் கிடைத்துள்ளதால் விண்ணப்பிக்கத் தகுதியுடையவர்கள் ஏமாற்றமடைந்துள்ளனர்.

கடந்த டிசம்பர் மாதம் 31ம் திகதி இதற்கான விண்ணப்ப முடிவு திகதி என்று தெரிவிக்கப்பட்டிருந்தது.

-72

பயிற்சி வகுப்பு

(யாழ்ப்பாணம்)

உருளைக்கிழங்குச் செய்கையை ஊக்குவிக்கும் நோக்குடன், பல்வேறு வேலைத்திட்டங்களை தமிழீழப் பொருண்மிய மேம்பாட்டு நிறுவனத்தின் கிராமிய உற்பத்திக் குழுக்கள் மேற்கொண்டன.

இதன் முன்னோடி நடவடிக்கையாக, மன்னார் மாவட்டத்தில் விநாயகபுரம் விவசாயக் கூட்டுறவுச் சங்கத்தின் ஆதரவுடன் உருளைக்கிழங்குச் செய்கை பற்றிய பயிற்சி வகுப்பொன்று விவசாயப் போதனாசிரியரால் நடாத்தப்பட்டது. இந்தப் பயிற்சி வகுப்பில் சுமார் 40 உருளைக் கிழங்குச் செய்கையாளர்கள் கலந்துகொண்டு பயன் பெற்றமையும் குறிப்பிடத்தக்கது.

நவம்பர் 26

(1ம் பக்கத் தொடர்ச்சி)

மயில் அசம்பாவிதம் எதுவும் நிகழுமா என்ற அச்சத்தின் காரணமாகப் பல திணைக்களங்களிலும் தனியார் நிறுவனங்களிலும் அநேகம் பேர் கடமைக்கு சமூகமளிக்கவில்லை என்றும் தற்பொழுது ஏ. எஸ். ஜி. குறூப் நிறுவனம் வேலை நீக்க நடவடிக்கையில் இறங்கியிருக்கின்றது என்றும் அந்தப் பத்திரிகை மேலும் தெரிவித்துள்ளது. —ம-சி

எலும்புக்கூடுகள்

(1ம் பக்கத் தொடர்ச்சி)

மீறலைக் கண்காணிக்கும் குழுவின் தலைவர் ஜே. எஸ். சூசா தெரிவித்துள்ளார்.

அவர் மேலும் கூறியதாவது: எமது குழு சுயேச்சையானது. எவ்வித அரசியல் தலையீடும் இல்லாதது. காணாமல்போனவர்கள் பற்றிநீதி இடம் [illegible] கேட்பவே எமது குழு நடவடிக்கை எடுக்கும்” என்றார். -ம-சி

இலங்கை அரசு

(1ம் பக்கத் தொடர்ச்சி)

இலங்கை ஆயுதப்படையினரின் கொலைகள், சித்திரவதைகள் பற்றியும் 1990 ம் ஆண்டு மூதூர் பகுதியில் பொலிசாரினால் கைது செய்யப்பட்டு பின்பு காணாமல்போன ஐந்து தமிழ் இளைஞர் பற்றியும் விவரங்களைத் தரும்படியும் சர்வதேச மன்னிப்புச்சபையின் தலைவர் தனது கடிதமூலம் கேட்டுள்ளார்.

இரண்டு மாதங்களில்

(1-ம் பக்கத் தொடர்ச்சி)

இராணுவத்திலேயே மிக அதிகமான உயிரிழப்பு இப்பகுதியில் ஏற்பட்டுள்ளதாகவும் இதையடுத்து இம்முறை கொழும்பில் புதுவருட கொண்டாட்டங்கள் பெருமளவு நிறுத்தப்பட்டதாகவும் அப்பத்திரிகை கூறியுள்ளது.

மேலும் ஆடம்பர கொண்டாட்டங்களுக்கு செலவிடும் பணத்தை படையினரின் சேமநலன்களுக்கு வழங்குமாறு அரசு கோரி வருவதும் தெரிந்ததே. —சி

நூலகம் யாழ்ப்பாணம்

மணிவாசகம்

அநேக மனிதர்கள் எதிலும் தோல்வி யடைவதில்லை. காரணம் அவர்கள் எதைச் செய்யவும் முயல்வதே இல்லை.

– லோபிநாத்பாரிசுவா

நமது நோக்கு

மாவிற்குக் கையேந்தல்!

கோதுமை மாவிற்குப் பதிலாக, மாற்றீட்டுப் பொருட்களைப் பயன்படுத்த மக்கள் தம்மைப் பழக்கப்படுத்திக் கொள்ள வேண்டும் என யாழ். அரச அதிபர் வேண்டுகோள் விடுத்துள்ளார்.

இப்படிப் பலர் பல முறை வேண்டுகோள்கள் விடுத்தும் மக்கள் உணர்வதாகத் தெரியவில்லை.

தமக்குரிய உணவைத் தாமே தமது பகுதியில் உற்பத்தி செய்திட வேண்டும் என்ற எண்ணம், மனப்போக்கு சமூகத்தில் வளர்க்கப்படவில்லை.

மாறாக, சென்ற பல வருடங்களாக இருந்த அரசியல் முறையில், நலச் சேவைகள் என்ற பெயரால், இலவச உணவும், மலிவு விலையில் விநியோகமும் இருந்த காரணத்தால், உற்பத்தி செய்து தான் உண்ண வேண்டும் என்ற எண்ணம் சீராக வேரூன்றவில்லை.

இந்த மனப்பான்மையினால், மாவிற்குத் தட்டுப்பாடு, அதனால் பாணுக்குக் கியூ, அடுத்த கப்பல் எப்போ என்ற ஏக்கமும் அவல நிலையும் தொடருகின்றன.

வெள்ளப் பெருக்கால், பாதிக்கப்பட்டவர்களுக்கு மா விநியோகிக்கப்படாதது. மழையால், விறகுத் தட்டுப்பாட்டால், வீடுகளில் உணவு தயாரிப்பதைக் குறைத்துப் பாணுக்கான கியூவில் நிற்கிறார்கள்.

இதைவிட, மாவின் தட்டுப்பாட்டிற்கான வேறு காரணங்களும் கூறப்படுகின்றன. களஞ்சிய வசதியின்மை, காலச் சீர்கேட்டால் இறக்கும் பணிக்கு ஏற்பட்ட இடையூறு, நிதிப் பற்றாக்குறை போன்றவை இவையாகும்.

கப்பல்கள் ஒழுங்காக வரத் தொடங்கியதும், தட்டுப்பாடின்றி மா கிடைத்ததும், மாற்றீட்டுப் பொருள்கள் பற்றிய சிந்தனை மறைந்துவிடுமல்லவா?

இப்படிச் சுடலை ஞானம் வருவதும் போவதுமான நிலைமை தொடரவிடலாமா?

ஊட்டச் சத்தற்ற அமெரிக்கன் மாவிற்குப் பதிலாக, உள்ளூரின் அரிசியும் குரக்கன், சோளம், பயறு ஆகியவற்றின் பயன்பாடு அதிகரிக்கப்பட உறுதியான நடவடிக்கைகள் எடுக்கப்படவேண்டும்.

அரசியற், பொருளாதாரச் சுதந்திரத்திற்காகப் போராடும் ஒரு சமூகம் சில சீரான மனப்பாங்குகளை, அரசியற் பொருளாதாரச் சிந்தனைகளை வளர்க்காவிட்டால், தியாகங்கள் விழலுக்கு இறைத்த நீராகிவிடுமா?

போராடிப் பெறும் உரிமைகளைத் தக்க வைக்கப் பொருளாதார விடிவுக்கான வழிகளையும் ஏற்க வேண்டாமோ?

★ தென்மராட்சியில் கடந்த வருடம்

90 வீதமான மரணங்கள்

விமானத் தாக்குதலால் ஏற்பட்டன

(சாவகச்சேரி)

தென்மராட்சி பிரதேச செயலர் பிரிவில் கடந்த வருடம் நடாத்தப்பட்ட திடீர் மரணவிசாரணைகளில் 90 வீதமானவை விமானத் தாக்குதலினால் ஏற்பட்ட மரணங்களாகும் என அப்பகுதி திடீர் மரணவிசாரணை அதிகாரியான திரு. நாகலிங்கம் தர்மேந்திரம் தெரிவித்துள்ளார்.

கடந்த வருடம் மட்டும் இப்பகுதியில் 137 திடீர்மரண விசாரணைகள் நடாத்தப்பட்டன. அவற்றில் நூற்றுக்கும் மேற்பட்டவை விமானக் குண்டுவீச்சாலும் ரொக்கட் தாக்குதலாலும் ஏற்பட்ட மரணங்களாகும். இதைவிட நூற்றுக்கணக்கானோர் இச்சம்பவங்களில் படுகாயமடைந்துள்ளனர். பலர் ஊனமுற்றுமுள்ளனர்.

இதேவேளை இந்த அதிகாரி கடந்த 15 வருடங்களில் இப்பகுதியில் 1, 026க்கும் மேற்பட்ட திடீர் மரண விசாரணைகளை நடாத்தியுள்ளார். (155-இ)

வெளிநாட்டுத் தபால்கள்

திருடப்படுவதைத் தடுக்க அரசு புதிய நடவடிக்கை

(கொழும்பு)

வெளிநாட்டுத் தபால்கள் திருடப்படுவதைத் தடுப்பதற்கு அரசு பல நடவடிக்கைகள் எடுக்க முடிவு செய்துள்ளது.

இதன் முதல் கட்டமாக வெளிநாட்டுத் தபால்களைத் திருடுபவர்களுக்கு எதிராகக் கடும் சட்ட நடவடிக்கைகள் எடுக்கப்படவுள்ளன.

மத்திய தபால் நிலையத்திலிருந்தே அதிகளவு வெளிநாட்டுத் தபால்கள் திருடப்படுவதாகத் தெரிவிக்கப்பட்டுள்ளது.

மத்திய தபால் நிலையத்தின் வெளிநாட்டுத் தபால் பிரிவை தரமுயர்த்துவதற்கும், அங்கு நிரந்தர ஊழியர்களை சேவைக்கு அமர்த்துவதற்கும் அரசு முடிவு செய்துள்ளதாக தபால் அதிபர் ஏ. சேன திசாநாயக்கா தெரிவித்துள்ளார்.

வெளிநாட்டுத் தபால்களை புறம்பான தபால் பைகளில் கட்டி அனுப்புவதற்கான நடவடிக்கைகளும் மேற்கொள்ளப்படவுள்ளன.

எதிர்வரும் முதலாம் திகதி முதல் இவற்றை அமுல் நடத்தத் திட்டமிடப்பட்டுள்ளதாகவும் தபால் மா அதிபர் மேலும் தெரிவித்துள்ளார்.

வெளிநாட்டுத் தபால்கள் பெருமளவில் திருடப்படுவது தொடர்பாக பொதுமக்களிடமிருந்து கிடைக்கப்பெற்ற பெருமளவு புகார்களை அடுத்தே இந்த நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படவுள்ளன.

-இ

இராசிபலன்

9-1-1994
ஞாயிற்றுக்கிழமை
(தமிழுக்கு மார்கழி 25)

துவாதசி மு 8-3 வரை; கேட்டை பி இ 3-57 வரை, மரணயோகம் இராகுகாலம் மாலை 5-02 முதல் 6-07 வரை சுபநேரம் காலை 9-32 முதல் 11-00 வரை.

மேஷம்: வெறும் பிரமை, பிடிவாதம், குடும்ப உறவில் விரிசல்

இடபம்: பண வசதிகள், மனமகிழ்ச்சி, புதிய முயற்சிகள்

மிதுனம்: சாதகமான தீர்ப்பு, பிரமாதமான வருவாய், காரியசித்தி

கடகம்: இறு தொல்லை, மேலிடக்கஷ்டம், அமைதிக் குறைவு.

சிம்மம்: தவறான சிந்தனை, கடன் தொல்லை, அலைச்சல்.

கன்னி: தொழில் சிறப்பு, உறவினர் வருகை பயண நன்மை.

துலாம்: காரியதடைகள், வீண் பெயர், ஆடம்பரச் செலவு

விருச்சிகம்: மேலதிகாரியின் ஆலோசனை, மனைவி பெருமை விருந்துண்ணல்

தனுசு: தொழில் கஷ்டம் வேண்டாதவர் தொல்லை, வெறுப்பு.

மகரம்: உயர்வான போக்கு, தொழில் லாபம், குடும்ப ஒற்றுமை

கும்பம்: துணிச்சலான முடிவு குடும்ப வசதி, சகோதர பாசம்.

மீனம்: தொழில் முரண்பாடு, உடல்நலக் குறைவு, மனவேதனை

— ஜோஸ்யர்.

கடும் மழையினால்

2,852 குடும்பங்கள் பாதிப்பு

(ஆனைப்பந்தி)

அண்மையில் பெய்த கடும் மழையினால் ஏற்பட்ட பெருவெள்ளத்தினால் ஊர்காவற்றுறை பிரிவைச் சேர்ந்த சுமார் இரண்டாயிரம் குடும்பங்களும் வேலணைப் பிரிவைச் சேர்ந்த 852 குடும்பங்களும் பாதிக்கப்பட்டுள்ளன.

இவற்றில் ஊர்காவற்றுறைப் பிரிவைச் சேர்ந்த குடும்பங்களின் தொகையில் இடம்பெயர்ந்தோர் முகாம்களிலும் வேறு இடங்களிலும் தங்கியுள்ளவை அடங்கும். வேலணைப் பிரிவைச் சேர்ந்த குடும்பங்களின் தொகையில் முகாம்களில் தங்கியுள்ளவை மட்டுமே அடங்கும். (101)

செங்கற்களினால்

வீதிகள் புனரமைப்பு

(யாழ்ப்பாணம்)

யாழ் நகரில் குன்றும் குழியுமாக காணப்பட்ட பல வீதிகள் மாநகராட்சி மன்றம் எடுத்த முயற்சியால் செங்கற்கள் மூலம் செப்பனிடப்பட்டுள்ளதாக மாநகராட்சி மன்ற மராமத்துப் பொறியியலாளர் தெரிவித்தார்.

யாழ். மாநகரசபை அண்மையில் எடுத்த நடவடிக்கையையடுத்து இந்த வீதிகள் திருத்தும் வேலைகள் ஆரம்பமாகின. இந்த வீதிகள் செங்கற்கள் போடப்பட்டு செப்பனிடப்பட்டது. செங்கற்களை பாவித்து செப்பனிடப்பட்ட வீதிகள் வெற்றியளித்துள்ளதாக அவர் மேலும் தெரிவித்தார். (162-இ)

வன்னிப் பகுதியில் நீதிமன்றம் திறப்பு

(யாழ்ப்பாணம்)

வன்னிப்பகுதி கிளிநொச்சியில் தமிழீழ மாவட்ட நீதிமன்றம் ஒன்று திறந்துவைக்கப்பட்டது.

தமிழீழ நீதி நிர்வாகப் பொறுப்பாளர் திரு. பரா தலைமையில் வன்னிமாவட்ட விசேட தளபதி ரவி தேசியக் கொடியை ஏற்ற வன்னி அரசியல் துறை துணைப் பொறுப்பாளர் ஞானம் - மங்களவிளக்கேற்றிவைக்க வன்னி மாவட்ட தளபதி சூட்டி இதனைத் திறந்து வைத்தார்.

தமிழீழ மாவீரர் பணிமனை பொறுப்பாளர் பொன்தியாகம் தமிழீழ அரசியல்துறையும், வன்னி பெருநிலப்பரப்பு நடுவப் பொறுப்பாளர் மதன், கிளிநொச்சி மாவட்ட சிறப்புப் பொறுப்பாளர் குட்டிமணி ஆகியோரும் கலந்து கொண்டனர். (இ)

வேண்டுகோள்

(பண்டத்தரிப்பு)

சங்கானை சிவப்பிரகாச மகா வித்தியாலயத்தின் மாணவர்கள் குடிதண்ணீர் பெறுவதற்கு மிகவும் சிரமப்படுவதால் வித்தியாலய வளவில் குழாய்க்கிணறு ஒன்றை நிறுவுவதற்கு உதவுமாறு வித்தியாலய பாடசாலை அபிவிருத்திச் சங்கம் அரசு சார்பற்ற பொது நிறுவனங்களிடம் வேண்டுகோள் விடுத்துள்ளது. (72)

★ பாவனைக்கு உதவாத

மாட்டிறைச்சி விற்பனை 4,000 ரூபா அபராதம்

(யாழ்ப்பாணம்)

பாவனைக்கு உதவாத மாட்டிறைச்சி விற்பனை செய்த நபர் ஒருவருக்கு யாழ். மாவட்ட தமிழீழ நீதிமன்ற நீதியாளர் 4000 ரூபா அபராதம் செலுத்தும்படி. தீர்ப்பளித்தார்.

பாவனைக்கு உதவாத மாட்டிறைச்சி பொதுமக்களுக்கு விற்பனை செய்ததாக குற்றஞ் சாட்டப்பட்டுத் தொடரப்பட்ட வழக்கு யாழ். தமிழீழ நீதித்துறை நீதியாளர் மயூரன் முன்னிலையில் விசாரணைக்கு எடுத்துக்கொள்ளப்பட்டது.

எதிரி குற்றத்தை ஒப்புக்கொண்டதை அடுத்து நீதியாளர் எதிரிக்கு நாலாயிரம் ரூபா தண்டம் செலுத்தும்படியும் தண்டம் செலுத்த தவறும் பட்சத்தில் நாலு மாதங்கள் கட்டாய சமூக சேவையில் ஈடுபட வேண்டுமென்றும் தீர்ப்பளிக்கப்பட்டது. (162 இ)

எள்ளினை உடனடியாக பயிர்செய்ய கோரிக்கை

[யாழ்ப்பாணம்]

இலகுவாகப் பயிரிடக்கூடிய செலவு குறைந்த இலாபம் தரக்கூடிய பயிராக எள்ளு விளங்குவதால் பயிரிடாமல் தரிசாக உள்ள மேட்டுக்காணிகளில் மழை பெய்து ஓய்ந்தவுடன் உடனடியாக ஒரு உழவுடன் எள்ளினை பயிரிடுமாறு தமிழீழ பொருண்மிய மேம்பாட்டு நிறுவனம் விடுத்துள்ள குறிப்பொன்றில் தெரிவிக்கப்படுகிறது.

வட தமிழீழத்திற்கான நல்லெண்ணெய் தேவையானது 15 மில்லியன் லீற்றர் என தமிழீழ பொருண்மிய மேம்பாட்டு நிறுவனம் மதிப்பிட்டுள்ளது. இந்தத் தேவையினை ஈடுசெய்ய 4500 ஹெக்டேயர் நில உற்பத்தியை மேற்கொள்ள வேண்டிய தேவை இருக்கிறது. தற்போது இங்கு உற்பத்தி செய்யப்படும் எள்ளின் அளவு போதாமையினால் நாம் எள்ளுக்காக சிங்களப் பிரதேசங்களை நம்பியிருக்க வேண்டிய நிலையும், இதனால் எண்ணெயினை எடுக்கும் செக்குத் தொழிலாளர்கள் பாதிப்படையும் நிலையும் இருந்துவருகிறது.

எள்ளிலே எம். ஐ. 1, எம். ஐ. 2, எம். ஐ. 3 ஆகிய வர்க்கங்கள் மூன்றரை மாதத்திலே பெரு விளைவினைத் தரக்கூடியதாக உள்ளதோடு ஒரு ஏக்கர் விதைப்பதற்கு 2 கிலோ எள்ளு போதுமானதாகவும் உள்ளது.

மழை இல்லாது விட்டாலும் நிலத்தின் ஈரத்துடன் வரட்சியினை தாங்கிவளரக்கூடியது எள்ளு என்பதால் உடனடியாகப் பயிரிடுமாறும், மேலதிக விபரங்களை தமிழீழ பொருண்மிய மேம்பாட்டு நிறுவன செயலகங்களில் பெற்றுக் கொள்ளுமாறும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

-இ

மின்னல்தாக்கி பெண் பலி

(கொழும்பு)

கொழும்பு விகாரமாதேவி பூங்காவில் மின்னல் தாக்குதலினால் பெண் ஒருவர் ஸ்தலத்தில் பலியானார். மற்றொருவர் படுகாயங்களுடன் ஆஸ்பத்திரியில் அனுமதிக்கப்பட்டுள்ளார்.

மேற்கண்ட தகவலை கறுவாக்காட்டுப் பொலிசார் நேற்று தெரிவித்துள்ளனர். (சரி)

பல்கலைக்கழக மருத்துவ மாணவர்களால்

காயமடைந்த படையினருக்கு விபரீதமான சிகிச்சைகள்

(கொழும்பு)

போரில் காயமடைந்த வீரர்களுக்கு பல்கலைக்கழக மருத்துவ பீடத்தில் கற்கும் மாணவர்களைக் கொண்டு சிகிச்சை அளிப்பதால் பல விபரீதங்களை எதிர்நோக்குவதாக இராணுவ அதிகாரிகள் அரசாங்கத்திற்கு சுட்டிக்காட்டியுள்ளனர்.

படையினரின் உயிரை ஒரு விளையாட்டுப் பொருட்களாக நினைக்கவேண்டாமென்றும் இம்மாணவர்களில் சிலர் ஒரு படை வீரருக்கு சிகிச்சை அளிக்கும்போது மூன்று முறை [illegible] வெட்டிய துர்ப்பாக்கிய நிலை ஏற்பட்டுள்ளதாகவும் குறிப்பிட்டுள்ளனர்.

ராகமை போதனா வைத்தியசாலையிலேயே அந்த மருத்துவ பீட மாணவர்கள் சிகிச்சை அளித்தனர் என்றும், இதனால் காயமுற்ற படையினர் சிலர் ஊனமடைந்து விட்டதாகவும் அந்த அதிகாரிகள் சுட்டிக்காட்டியுள்ளனர். -ம-சி

அமைச்சர்கள் குழு

திருமலை விஜயம்

(கொழும்பு)

புனர்வாழ்வு புனர் நிர்மாண அமைச்சர் திரு. பி. தயாரத்ன தலைமையிலான அமைச்சர்கள் குழுவொன்று நேற்று முன்தினம் திருமலைக்குச்சென்று நிலைமைகளை பார்வையிட்டது.

திருமலை அகதிமுகாம்களில் உள்ள அகதிகளை மீள அவர்களது சொந்த இடங்களுக்கு அனுப்ப இந்த அமைச்சு குழு நடவடிக்கை எடுக்கவுள்ளது.

நேற்று முன்தினம் இங்கு நடைபெற்ற புனர்வாழ்வு புனர் நிர்மாணம் சம்பந்தமான கூட்டத்தில் அமைச்சர்களுடன் வடக்கு கிழக்கு மாகாண ஆளுநர் திரு. லயனல் பெர்ணாண்டோவும் கலந்து கொண்டார். -சி

'இதழியல்' சான்றிதழ்

(யாழ்ப்பாணம்)

யாழ்ப்பாணப் பல்கலைக்கழக புறநிலை படிப்புகள் அலகினால் நடாத்தப்படும் 'இதழியல்' அடிப்படை சான்றிதழ் நெறி தொகுதி இரண்டின் நிறைவு நாளும் சான்றிதழ் வழங்கும் வைபவம் இன்று 9ம் திகதி காலை 9மணிக்கு பல்கலைக்கழக முகாமைத்துவ மண்டபத்தில் நடைபெறும்.

யாழ் பல்கலைக்கழக புவியியற்றுறை விரிவுரையாளரும், புறநிலைப்படிப்புகள் அலகின் இணைப்பாளருமான இரா. சிவசந்திரன் தலைமை வகிக்க இன்று முதன்மை விருந்தினராக கலைப்பீடாதிபதி பேராசிரியர் பொ. பாலசுந்தரம்பிள்ளை பங்கு கொள்கிறார். (ம சி)

ஆறுமாதகால உலர் உணவு

(நெல்லியடி)

வடமராட்சி சக்கோட்டை கடற்பரப்பில் கடந்த 4ம் திகதி ஸ்ரீலங்கா கடற்படைத் தாக்குதலில் மரணமான காணாமல் போனவர்களின் குடும்பங்களுக்கு இலங்கை செஞ்சிலுவைச் சங்கத்தின் பருத்தித்துறைக் கிளையினர் சுமார் ஆறுமாத காலத்திற்கான உலர் உணவு விநியோகத்தை வழங்கவுள்ளனர். -160-சி

காரைநகர் படையினர்

பலத்தஷெல்தாக்கு

(யாழ்ப்பாணம்)

காரைநகர் கடற்படை முகாமிலிருந்து நேற்று முன்தினம் இரவு 7 மணிக்குப் பொன்னாலை, மூளாய் பகுதிகளை நோக்கி பலத்த ஷெல் தாக்குதல் மேற்கொள்ளப்பட்டது.

மாலை 6 மணிக்கு ஹெலிகொப்டர் ஒன்று அப்பகுதிகளைச் சுற்றி வட்டமிட்டு நோட்டம் பார்த்துச் சென்றதையடுத்தே இச் ஷெல் தாக்குதல் இடம்பெற்றது.

கரையோரப் பகுதிகளை அண்டியே ஷெல்கள் விழுந்து வெடித்ததால் சேதமெதுவும் ஏற்படவில்லை. (சி)

மரண அறிவித்தல்

திருமதி
இராசம்மா சிவஞானம் ஆச்சாரி

யாழ்ப்பாணம் கன்னாதிட்டியைச் சேர்ந்த திருமதி சி. இராசம்மா அவர்கள் காலமாகிவிட்டார்.

இவர் காலஞ்சென்ற திரு. செ. சிவஞானம் ஆச்சாரியாரின் அன்பு மனைவியும், மு. கண்ணம்மா, (லோகநாயகி இந்தியா), பாபநாசசிவன் (ஆச்சாரியார் கடைச்சல் பட்டறை), ச. சத்தியபாமா, கிருஷ்ணமூர்த்தி (கு டி ஆச்சாரியார் கடைச்சல் பட்டறை), ச. வேலம்மா, கணேசன் (கனடா), ராதா (கனடா), பாலமுரளிதரன் (இந்தியா) ஆகியோரின் அன்புத் தாயாரும், காலஞ்சென்ற க. முருகன், ப. கணேசன், காலஞ்சென்ற ப. சுந்தரராமன், காலஞ்சென்ற ப. சம்பதி, பா. லெட்சுமி, இ. செண்பகமலர் ஆகியோரின் அன்பு மாமியும் ஆவார்.

ஈமக்கிரியைகள் இன்று ஞாயிற்றுக்கிழமை (9-1-94) மாலை 3 மணிக்கு அன்னாரின் இல்லத்தில் நடைபெற்று தகனக்கிரியைக்காக கோம்பயன்மணல் மயானத்திற்கு எடுத்துச் செல்லப்படும்.

இத்தகவலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரையும் ஏற்றுக்கொள்ளுமாறு வேண்டிக்கொள்கின்றோம்.

12/7, கன்னாதிட்டி லேன்,
யாழ்ப்பாணம்

தகவல்:
சி. பாபநாசசிவன்
(சி 708)

இப்பத்திரிகை "ஈழநாடு" லிமிடெட் ஸ்தாபனத்தாரால் யாழ்ப்பாணம் சிவன் கோவில் மேற்கு வீதி, 63-ம் இலக்கத்திலுள்ள அவர்களது அச்சகத்தில் 1994ம் ஆண்டு ஜனவரி மாதம் 9-ம் திகதி அச்சிட்டு வெளியிடப்பட்டது.

Registered a ua News paper at the General Post office, Sri Lanka under Licence Number B/10 336/B

கொழும்பில்

(1ம் பக்கத் தொடர்ச்சி)

குள்ளாக்கப்பட்டிருக்கின்றார்கள்.

ஒரு தடவை கைதாகி நீதிமன்றம் கொண்டு செல்லப்பட்டு, விடுவிக்கப்பட்டவர்களை மீண்டும் கைது செய்யக்கூடாது என்ற நடைமுறை இருக்கையில் இக்கைதுகள் இடம் பெற்றுள்ளது.

கைதாகும் தமிழர்கள் பணம் பெற்றபின் விடுவிக்கப்படுகிறார்கள் என்றும் முன்னர் 4ம் மாடியில் சித்திரவதைக்கு உள்ளான நிலைமாறி 6ம் மாடியில் சித்திரவதைக்கு உள்ளாகும் நிலைமை தோன்றியுள்ளதாகவும் தெரிவிக்கப்படுகிறது. -ம-சி

காஞ்சி காமகோடி

(1ம் பக்கத் தொடர்ச்சி)

கப்பட்டுள்ளது. சென்னைக்கு வருகை தந்திருந்த காஞ்சி சங்கராச்சாரிய சுவாமிகள் ஸ்ரீஜெயேந்திர சரஸ்வதி சுவாமிகளும், விஜயேந்திர சுவாமிகளும் உடனடியாக காஞ்சிபுரம் விரைந்தனர்.

காஞ்சி சங்கர மடத்தின் 68-வது பீடாதிபதியான ஸ்ரீசந்திரசேகரேந்திர சரஸ்வதி சுவாமிகளின் நூற்றாண்டு விழா அண்மையில் வெகு சிறப்பாக நடைபெற்றதும் குறிப்பிடத்தக்கது.

ஆங்கிலம், பிரெஞ் போன்ற வெளிநாட்டு மொழிகளிலும் பல இந்திய மொழிகளிலும் புலமைபெற்று விளங்கிய சுவாமிகள் ஆன்மீகத்துறையில் தனித்துவம் பெற்று விளங்கினார். பூர்வாச்சிரமத்தில் சுவாமிநாதன் எனப் பெயரிடப்பட்டிருந்த அவர் 1894ம் ஆண்டு விழுப்புரத்தில் பிறந்தார். இளவயது முதலே கல்வியில் சிறந்த ஞானம் பெற்று விளங்கிய இவர் பள்ளியில் படிக்கும்போது 'பைபிளில்' முதல் பரிசு பெற்றிருந்தார்.

15 வயதிலேயே துறவறத்தை மேற்கொண்டவர். 1907 ஆம் ஆண்டு காஞ்சி மடத்தின் பீடாதிபதியாகப் பொறுப்பேற்றார். இவர் இந்தியா முழுவதும் பாதயாத்திரையாக சென்று ஆன்மீகத்தை பக்தி நெறியில் பரப்பி வந்தார். இவர் தம் வாழ்நாள் முழுவதையும் இறைபணிக்கும் மனிதகுல மேம்பாட்டிற்கும் அர்ப்பணித்தவர். தமது எளிய வாழ்க்கை முறையால் லட்சோபலட்சம் மக்களை கவர்ந்திருந்த இவரை தரிசிப்பதற்காக பாமர மக்களிலிருந்து வெளிநாட்டு பெருந்தலைவர்கள் வரை காஞ்சி மடத்திற்கு வந்துள்ளனர்.

இவரது மறைவு குறித்து இந்திய ஜனாதிபதி, பிரதமர் முன்னாள் இந்திய ஜனாதிபதி, தமிழக முதல்வர் மற்றும் பல மத்திய அரசு அமைச்சர்களும், மாநில முதலமைச்சர்களும் இரங்கல் செய்தி விடுத்துள்ளனர். (சி)

தேர்தலுக்கு தயாராகும்

எதிர்க் கட்சிகள்

(கொழும்பு)

நாட்டில் விரைவில் நடைபெறவுள்ள தேர்தல்களைச் சந்திக்கும் பொருட்டு ஸ்ரீலங்கா சுதந்திரக்கட்சி உட்பட பொதுசன ஐக்கிய முன்னணி மேலும் பல எதிர்க்கட்சிகளை தனது அணியில் சேர்க்கும் முயற்சியில் ஈடுபட்டுள்ளது என்று தெரிவிக்கப்படுகிறது.

மக்கள் ஐக்கிய முன்னணி, காமினி திசநாயக்காவின் ஐக்கிய தேசிய ஜனநாயக முன்னணி ஆகிய கட்சிகளோடு சுதந்திரக் கட்சி பேச்சுவார்த்தைகளை நடாத்தி வருகின்றது என்றும், இதில் முஸ்லிம் காங்கிரசையும் சம்பந்தப்படுத்த முயற்சி நடைபெற்று வருகின்றது என்றும் ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சி செயலாளர் தர்மசிறி சேனநாயக்கா தெரிவித்துள்ளார். —ம-சி

யாழ். ஆஸ்பத்திரியில் நேற்று

இருவர் மரணம்

(யாழ்ப்பாணம்)

கடந்த 4ம் திகதி நள்ளிரவு சுருட்டுப் பற்றவைத்தபோது குப்பிவிளக்கு தட்டுண்டு தீப்பற்றி எரிந்து ஆபத்தான நிலையில் யாழ் ஆஸ்பத்திரியில் அனுமதிக்கப்பட்டு சிகிச்சைக்குட்படுத்தப்பட்டிருந்த நல்லூர் வடக்கைச்சேர்ந்த மாரிமுத்து பொன்னுத்துரை (வயது 81) என்பவரே நேற்று மரணமானார்.

இதேவேளை மலேரியாக் காய்ச்சலினால் பீடிக்கப்பட்டு யாழ் ஆஸ்பத்திரியில் சிகிச்சைக்குட்படுத்தப்பட்டிருந்த கரியாலை நாவலடி அகதிமுகாமைச் சேர்ந்த செபஸ்தி பத்திநாதர் (வயது 60) என்பவர் மரணமானார். -சி

இருமுன்னாள் அமைச்சர்கள்

அ.தி.மு.க.விலிருந்து நீக்கம்

(சென்னை)

அ. தி. மு கவின் முன்னாள் அமைச்சர்களும் தற்போதைய சட்டப்பேரவை உறுப்பினர்களுமான திரு. அழகு திருநாவுக்கரசும், திரு. ஜி. விஸ்வநாதனும் கட்சி விரோத நடவடிக்கையில் ஈடுபட்டதற்காக கட்சியிலிருந்து நீக்கப்பட்டுள்ளனர்.

சென்னையில் நேற்று கட்சியின் பொதுச்செயலரும் முதலமைச்சருமான செல்வி ஜெயலலிதா வெளியிட்டுள்ள அறிக்கையில் இத்தகவல் தெரிவிக்கப்பட்டுள்ளது. இவர்கள் கட்சியின் அடிப்படை உறுப்பினர் பதவியிலிருந்தும் நீக்கப்பட்டுள்ளனர்.

மேற்படி இருவரும் நேற்று முன்தினம் கட்சியின் ஸ்தாபகரான காலஞ்சென்ற எம். ஜி. ஆரின் கொள்கைகளில் தற்போதைய கட்சித்தலைமை தோல்வியடைந்திருப்பதாக குற்றம் சாட்டியமையைத் தொடர்ந்தே இந்த நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டுள்ளது. —சி

கிழக்கில் ராணுவம்

புதிய கெடுபிடி

(கொழும்பு)

கிழக்கு மாகாண உள்ளூராட்சித் தேர்தல்களில் போட்டியிட மறுக்கும் பொது அமைப்புகளின் தலைவர்களை இராணுவத்தினர் தற்போது கைதுசெய்து வருவதாக செய்திகள் தெரிவிக்கின்றன.

திருகோணமலை மாவட்டத்திலுள்ள கிராமோதய சங்கங்கள், ஆலய பரிபாலன சபைகளைச் சேர்ந்த பத்துப்பேரை உள்ளூராட்சித் தேர்தலுக்கான வேட்பு மனுக்களை தாக்கல் செய்யும்படி இராணுவத்தினர் நேற்று முன்தினம் வற்புறுத்தினர். ஆனால் இந்த ஸ்தாபனங்களின் தலைவர்கள் இராணுவத்தினரின் கூற்றுக்கு மறுப்புத் தெரிவித்துவிட்டதினால் இவர்களை இராணுவத்தினர் தற்போது கைது செய்துள்ளார்கள். -வி-சி

அரசு நடத்தும்

(1-ம் பக்கத் தொடர்ச்சி)

உரிமைகள் அமைப்புகளினதும், பத்திரிகைகளினதும் தகவல்படி இலங்கையில் நிலைமை மிக மோசமாக இருப்பது தெளிவாகிறது.

இதேவேளை இலங்கையில் தமிழரின் போராட்டம் குறித்து விடுதலைப்புலிகள் சர்வதேச ரீதியில் மிகத் திறம்பட பிரசாரங்களை மேற்கொண்டு வருகிறார்கள். இது அவர்களுக்கு நல்ல பலனைத் தருகிறது ஆனால் யுத்தம் தனது போக்கில் சென்று கொண்டிருக்கிறது.

அழகு நிறைந்த அந்த நாடு உள்நாட்டுப் போரால் அழிகிறது. தொடர்ந்தும் அங்கு துக்கநிலையே காணப்படுகிறது எனவும் அவர் குறிப்பிட்டுள்ளார். -சி

10 வருடங்களில்

(1ம் பக்கத் தொடர்ச்சி)

பி. ஸி சிங்கள சேவையில் தெரிவித்தார்.

அவர் மேலும் கூறியதாவது: 'சூரியகந்த'வில் மனித எலும்புக்கூடுகள் கண்டுபிடிக்கப்பட்டபின் ஐக்கிய தேசியக் கட்சி அரசாங்கம் பல சங்கடமான நிலைகளுக்கு வந்துவிட்டது. இந்த எலும்புக்கூடுகள் எம்பிலிப்பிட்டியாவில் காணாமற்போன பாடசாலை சிறுவர்களின் எலும்புக் கூடுகளாக இருந்தால் அரசாங்கத்தின் நிலை மேலும் பெரும் சிக்கலை எதிர்நோக்கவேண்டி வரும்.

மனித உரிமை மீறல் சம்பந்தமாக விசாரிக்கும் குழு எம்பிலிப்பிட்டியாவில் காணாமற்போன மாணவர்கள் சம்பந்தமாக பாடசாலை அதிபர் தயானந்த வலக்பத்தி, கேணல் ஆர். பி. லியனகே, கப்டன் ஜோன் ஜாவி, லெப்டினன்ட் ரூபசிங்க மற்றும் இரண்டு படையினர்களுக்கு எதிராக நடவடிக்கை எடுக்குமாறு சிபார்சு செய்யப்பட்டபோது அரசாங்கம் எதுவித நடவடிக்கையும் எடுக்காது அவர்களைப் பாதுகாத்துக்கொண்டதோடு பாடசாலை அதிபருக்கு உதவிக் கல்விப் பணிப்பாளராக பதவி உயர்வும் கொடுத்துள்ளது'' என்றார். -ம-சி